## 2.103 ஊர்நல அலுவலர் பயிற்சிக்குச் சென்ற அலுவலர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வுகள் பயிற்சி காலத்திற்கான ஊதிய உயர்வு

ஊரக வளர்ச்சி ( பஅ4) துறை

அரசாணை (நிலை) எண். 367 நாள் : 30.12.1997

1. அரசாணை (நிலை) எண். 535 ஊரக வளர்ச்சி நாள். 10.07.1986
2. அரசாணை (நிலை) எண். 164 ஊரக வளர்ச்சி நாள். 30.07.1992
3. ஊரக வளர்ச்சி இயக்குனரின் கடித எண். 56683/93/பி2 நாள். 3.6.97

**ஆ ணை**

அரசாணை (நிலை) எண். 535 ஊரக வளர்ச்சி நாள் 10.07.86 ல் அவ்வாணை பிறப்பித்த நாள் தொடங்கி , பயிற்சிக்கு செல்லும் ஊர்நல அலுவலர்களின் பயிற்சிக் காலத்திற்கு ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் என்றும், பயிற்சிக் காலத்தை தகுதிகாண் பருவத்திற்கு சேர்த்துக் கொள்ளலாம் என்றும் ஆணையிடப்பட்டன. அந்த அரசாணையில் ஆணை பிறப்பித்ததற்கு முன்னர் பயிற்சி முடித்த ஊர்நல அலுவலர்களுக்கு அப்பயன்கள் வழங்கக் கூடாதென ஆணையிடப்பட்டது. ஊர்நல அலுவலர்கள் சங்கம், மேற்சொன்ன இரண்டு பயன்கள் இதற்கு முன்பு பயிற்சிக்குச் சென்றவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்ததின் பேரில் இது தொடர்பாக ஆணை அரசாணை (நிலை ) 164 , ஊரக வளர்ச்சி நாள். 30.7.92 வெளியிடப்பட்டது. அந்த ஆணையில் 10.07.86 க்கு முன்னர் ஊர்நல அலுவலர் பயிற்சிக்கு சென்று , தற்போது பல்வேறு பதவிகளில் இருப்பவர்களுக்கும் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கவும் அவர்களது பயிற்சிக் காலத்தை தகுதிகாண் பருவத்திற்கு சேர்த்துக் கொள்ளவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பணப்பயன் முன்மேவு பயனுடன் வழங்கப்படாமல் அரசாணை வெளியிடப்பட்ட அதாவது 30.7.92 முதல் வழங்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டது.

2. ஆனால் பல்வேறு மாவட்டங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் 10.7.86 க்கு முன் பயிற்சி முடித்தவர்களுக்கு, படிக்கப்பட்ட அரசாணை (2) பிறப்பித்த நாளில் உள்ள ஊதிய விகித அடிப்படையில் ஊதிய உயர்வுகள் வழங்கியதாக ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்தார். இந்நிலையில் மாநிலக் கணக்காயர் தணிக்கைத் தடைகள் மற்றும் இறப்பு மற்றும் ஓய்வூதியக் கொடையிலிருந்து பிடித்தம் செய்யும் உத்திரவு பிறப்பித்து வருவதாக அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். ஊரக வளர்ச்சி இயக்குநர் தனது அறிக்கையில் படிக்கப்பட்ட அரசாணை (2) வெளியிட்ட போது அதாவது 30.7.92 அன்று ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் என்ன ஊதியம் பெற்றார்களோ அதன் அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பது பணியாளர்களின் கோரிக்கை என்றும் , மேலும் ஊர்நல அலுவலர்கள் பதவி தற்போது அமைச்சுப் பணியுடன் சேர்க்கப்பட்டு ஊர்நல அலுவலர்கள் வகை தனியே இல்லாமையால் படிக்கப்பட்ட அரசாணை (2) ன் அடிப்படையில் ஏற்கனவே அளித்த ஊதிய உயர்வை பின்னேற்பளித்து ஆணையிட வேண்டுமென்றும் பயிற்சிக்கு சென்று இப்பயன் வழங்கப்படாதவர்க்கும் இப்பயனை அளிக்க வேண்டுமென்றும் அரசைக் கேட்டுள்ளார்.

3. அரசு இதை நன்கு ஆய்வு செய்து , படிக்கப்பட்ட அரசாணை (2) ன் அடிப்படையில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு பயிற்சிக் காலத்திற்கு கருத்தினாய்வு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு அவர்களது ஊதியத்தை 29.7.92 வரை முறைப்படுத்தி அதன்பின்னர் பணப்பயன் அளிக்க வேண்டியிருந்தால் 20.7.92 முதல் பணப்பயன் அனுமதிக்கலாமென்றும் அதற்கு மேலாக ஏற்கனவே, வழங்கப்பட்ட பயனை ஓய்வு பெற்றவர்களிடமிருந்து திரும்பப் பெற்றால் அது அவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் என்பதாலும் அவர்களுக்கு அதிகப்படி வழங்கப்பட்ட பணப்பயனை தள்ளுபடி செய்தும் அதே போன்று தற்போது பணியில் இருப்பவர்களுக்கும் அதிகப்படி வழங்கப்பட்ட பணப்பயனை தள்ளுபடி செய்தும் இதன் மூலம் ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறை அ.சா.கு. எண். 104067/ஆர்.டி./97–1 நாள். 30.12.1997 தெரிவித்துள்ள இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்